பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper




# உதயன்

விலை ரூ 2/-




மடல்: 4 யாழ்ப்பாணம் விபவ ஞு மார்கழி மீ 02 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ அவ்வல் பிறை 7 (17 - 12 - 1988) UTHAYAN-A lively Tamil Daily கதிர்: 20

# ஜனாதிபதித் தேர்தல் நடந்தே தீரும்

## ஆணையாளர் கூறுகிறார்

கொழும்பு, டிசம்பர் 17

"ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படமாட்டாது. அது நடந்தே தீரும்".

இப்படி தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கான சகல ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுவிட்டன என்றும் அவர் கூறினார்.

இதற்கிடையில் ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைக்கும்படி ஜனநாயக மக்கள் முன்னணியின் எந்த உறுப்பினரும் தேர்தல் ஆணையாளரைக் கோரவில்லை என்று எதிர்க் கட்சித் தலைவர் திரு. அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

வாக்களிக்க வேண்டாம் என்று ஜே.வி.பியினர் கோருவதாகக் கூறும் சுவரொட்டிகளை வெளியிட யு. என். பி. யின் உயர்மட்டத்தைச் சேர்ந்த சிலர் முயற்சிப்பதாக எமக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.

சார்க் அமைப்பு நாடுகளின் கண்காணிப்புக் குழுவிடம் இது பற்றி முறையிட உள்ளோம்.

சுதந்திரக் கட்சி மீதான தடையை ஜே. வி. பியினர் நீக்கிவிட்டதாகக் கூறும் துண்டுப் பிரசுரங்களை ஹெலிக்கொப்டர் மூலம் விநியோகிக்க நாம் நடவடிக்கை எடுப்பதாகக் கூறுவது கோமாளித்தனமானது.

இப்படி திரு. பண்டாரநாயக்கா மேலும் கூறினார்.

அதே சமயம் தென் இலங்கையில் வன்செயல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

ஹம்பாந்தோட்டையில் ஒரு தீவிரவாத சந்தேகநபர் நேற்று பாதுகாப்புப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கண்டி, பதுளை பகுதிகளிலும் ஹம்பாந்தோட்டையிலும் 33 தீவிரவாத சந்தேக நபர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.

காலியில் பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் இனந்தெரியாத நபர்களினால் சுட்டுக்கொல்

(6 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



எதைக் கண்காணிப்பது என்டது தான் பிரச்சினை பாருங்கோ! தேர்தலையோ...? வன் செயல்களையோ...?

சார்க் நாடுகளின்

## கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதிகள் கொழும்பில்

கொழும்பு, டிச 17

சார்க் நாடுகளின் கண்காணிப்புக் குழுவில் இடம்பெறும் பிரதிநிதிகள் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தனர்.

சார்க் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினர்களும் கொழும்பில் உள்ள உள்ளூர் அவதானிகள் குழு உறுப்பினர்களும் வடக்கு-கிழக்கு மாகாணம் உட்பட எல்லா மாகாணங்களுக்கும் தேர்தல் அன்று விஜயம் செய்து தேர்தல் நடைபெறும் விதத்தை நேரில் அவதானிப்பர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

## சிறிமாவோ வெற்றிக்கு திருப்பதியில் பூசை!

திருப்பதி, டிச 17

ஜனாதிபதித் தேர்தலில் பண்டாரநாயக்கா வெற்றி பெற திருப்பதி ஏழுமலையானின் அனுக்கிரகத்தை இலங்கைவாசி ஒருவர் நாடி இருக்கிறார்.

ஆர். டி பண்டாரநாயக்கா என்ற பெயருடைய இலங்கைப்பிரசை கொழும்பில் இருந்து, திருப்பதிக் கோயிலில் 20 நாள் வழிபாடு நடத்த உண்டான செலவுக்குத்தனது உதவியாளர் மூலம் 2, 900 ரூபாய் பணம் தேவஸ்தானத்துக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

அவரது கோரிக்கையின் பேரில் சென்ற மாதம் 30 ஆம் திகதியில் இருந்து திருப்பதி ஆலயத்தில் சிறிமாவோ அம்மையார் பேரில் சஹஸ்ரநாம அர்ச்சனையும் பூராபிஷேகம், தோமலசேவை என்பனவும் நடத்த ஏற்பாடாகியிருந்தது.

இது தொடர்பாக அந்த இலங்கையர் தேவஸ்தானத்துக்கு எழுதியுள்ள கடிதத்தில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உடுத்துறையில் இளைஞர் மரணம்

தாளையடி, டிச 17

வடமராட்சி கிழக்கில் உள்ள உடுத்துறை என்னுமிடத்தில் கடந்த வியாழக்கிழமை அமைதிப்படையின் தேடுதல் நடவடிக்கையின் போது இளைஞர் ஒருவர் சயனைற் உட்கொண்டு மரணமானார்.

இளைஞரின் சடலம் வெற்றிலைக் கேணியைச் சேர்ந்த அவரது பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஓ-144)

## துப்பாக்கிச் சூட்டுச் சத்தம்

யாழ்ப்பாணம் டிச 17

திருநெல்வேலிப் பகுதியில் நேற்று மாலை 6.15 மணியளவில் தொடர் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டன. இதனால் அந்தப் பகுதியில் பதற்றம் நிலவியது. (ஓ-5)

யாழ் மாவட்டத்தில்

## இரவு நேர பஸ்சேவை இப்போதைக்கு இல்லை

யாழ். மாவட்டத்தில் இரவு நேர பஸ் சேவை நடத்துவதற்கு இப்போது நிலைமை சாத்தியமாக இல்லை:

-இவ்வாறு வட பிராந்திய போக்குவரத்துச் சபை முகாமையாளர் திரு எஸ். சொக்கலிங்கம் தெரிவித்தார்.

இரவு நேர ஊரடங்குச் சட்டம் மேலும் இரண்டு மணி நேரம் தளர்த்தப்பட்ட போதிலும் கிராமப் புறங்களில் ஆறுமணிக்கே மக்கள் நடமாட்டம் குறைந்து விடுகிறது.

அது மட்டுமல்லாமல் மின் விநியோகம் தடைப்பட்டுள்ளதால் எல்லாப்பகுதிகளும் இருளில் மூழ்கியுள்ளன. இதனால் பயணிகள் பல இன்னல்களையும் எதிர் நோக்க வேண்டி வரலாம்.

இதனைக் கருத்திற் கொண்டு மின்சார விநியோகம் சீரடைந்த பின்பே இரவு நேர பஸ் சேவையை நடத்துவது பற்றி ஆலோசிக்க வேண்டும்- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஓ-10)

## காலமானார்

புதுடில்லி, டிச. 17

பிரபல தமிழ் எழுத்தாளர் திரு. க. நா. சுப்பிரமணியம் (வயது 73) நேற்று அதிகாலை புதுடில்லியில் காலமானார்.

தமிழில் விமர்சனக் கலையின் தந்தை என்று இவர் வர்ணிக்கப்பட்டு வந்தார். (ஓ-எ)

## சுபநேரம்

17-12-1988
மார்கழி 2
சனிக்கிழமை
சுப நேரம்:
3 23முதல் 4.53வரை
ராகு காலம்:
9 23முதல் 10.53வரை
நவமி இரவு 8 28 வரை

## நிவாரணம் இன்று இல்லை; இருதினங்களுக்கும் சேர்த்து நாளையே வழங்கப்படும்

யாழ்ப்பாணம் டிச 17

இடம் பெயர்ந்தோருக்கான நிவாரணம் இன்று வழங்கப்படமாட்டாது.

நாளை ஞாயிற்றுக் கிழமையே வழங்கப்படும் என்று இலங்கை வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

நாளை வழங்கப்படும் போது நாளை நிவாரணம் பெற உள்ளவர்களுக்கும் இன்று நிவாரணம் பெற இருந்தவர்களுக்கும் சேர்த்து வழங்கப்படும்.

ஸ்ரான்லி வீதி இலங்கை வங்கிக் கிளையில் நாளை ஞாயிற்றுக்கிழமை நிவாரணம் பெறுவோர் விவரம் வருமாறு:—

கொட்டடி—69 குடும்பங்கள், கொழும்புத்துறை-783 குடும்பங்கள், பெரியகடை—426 குடும்பங்கள், குருநகர் மேற்கு—60 குடும்பங்கள், குருநகர் கிழக்கு—60 குடும்பங்கள்.

பத்தாம் பதினோராம் திகதிகளில் நிவாரணப் பணம் பெறாதவர்கள் நாளை தமக்குரிய நிவாரணப் பணத்தை இக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம்.

காங்கேசன்துறை இலங்கை வங்கிக் கிளையிலும் நாளை நிவாரணம் வழங்கப்படுகிறது.

மாவிட்டபுரம் — 195 குடும்பங்கள், கொல்லன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குண்டு வெடிப்பு: 25 பேர் காயம்

கொழும்பு. டிச 17

கொழும்புக்கு வெளியே நேற்று நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் இரு குண்டுகள் வெடித்தன

இதில் 25பேர் காயமடைந்தனர்.

எனினும் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா காயம் எதுவும் இன்றித் தப்பினார்.

# பிரிந்து போகும் அதிகாரம் சேர்ந்த சுயாட்சி உரிமை

## தமிழர்களுக்கு வேண்டும் — ஒஸி

யாழ்ப்பாணம், டிச 17

★ தமிழ் மக்களுக்கு, பிரிந்து போகும் அதிகாரத்துடன் கூடியசுயாட்சி வழங்கப்பட வேண்டும். ஆனால் அவர்கள் பிரிந்து போகக் கூடாது.

★ இலங்கை, இந்தியாவின் 26 ஆவது மாநிலமாக மாறுவதை நானும் எனது கட்சியும் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்

★ தமிழ் மக்களின் எதிர்கால நன்மை கருதியும், போரினால் அழிந்து சிதைந்து போனவற்றை மீண்டும் கட்டி எழுப்பும் நோக்குடனும் தமிழ்ப் போராளிகள் இயக்கங்கள் அனைத்தும் ஒன்றுபடவேண்டும்.

★ அத்தோடு தமிழர் இயக்கங்களுக்கும், அறிவும் அனுபவமும் உள்ள தமிழ் அரசியல் தலைவர்களுக்கும் இடையில் இணைப்பு அவசியம். இருசாராரும் இணைந்து செயற்பட வேண்டும்

நேற்றுக்காலை யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசிய மக்கள் கட்சி வேட்பாளர் திரு. ஒஸி அபயகுணசேகரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஏனைய இருவரும் இடத்திற்கு ஏற்றவாறு பேசுகின்றனர்.

சிங்கள மொழி பற்றியும், பௌத்த சமயம் பற்றியும் சிங்களத்தில் பேசுகின்றனர்.

தமிழர் பிரச்சினைகள் குறித்தும், சுயாதிக்கம் குறித்தும் தமிழர் மத்தியில் தமிழில் பேசுகின்றனர்.

சர்வதேச ராஜதந்திர உறவுகளைக் கருத்தில் கொண்டும், இந்தியாவுடனான உறவுகள் குறித்து ஆங்கிலத்தில் பேசுகின்றனர்.

ஆனால் நான் இந்த நாட்டின் எந்தப் பகுதிக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிங்கள — பௌத்த பேரினவாதத்தின் பிடி உடைந்துவிட்டது என்கிறார் வாசுதேவ

யாழ்ப்பாணம், டிச. 17

இந்த நாட்டின் ஆட்சியில் சிங்கள-பௌத்த பேரினவாதம் வைத்திருந்த பிடி இப்போது உடைந்து விட்டது.

நவசமசமாஜக் கட்சித் தலைவர் திரு. வாசுதேவ நாணயக்கார இவ்வாறு கூறினார்.

வெள்ளிக்கிழமை காலை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இலங்கை மக்கள் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் திரு. ஒஸி அபயகுணசேகரவை ஆதரித்து இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அவர் பேசினார்.

அவர் தமது பேச்சில் மேலும் தெரிவித்ததாவது:-

நான் என்னை சிங்களவன் என்று அறிமுகப் படுத்திக் கொள்வதில்லை. ஒரு சோஷலிஸ்ட் என்றே நான் என்னை அறிமுகப்படுத்திக் கொள்வதுண்டு.

இன்று உங்களுக்கு ஈழ மாநிலம் கிடைத்திருக்கிறது. இது பல தியாகங்கள் மூலமாகவே கிடைத்திருக்கிறது.

வடக்கு, கிழக்கு மாநிலம் சிங்கள பௌத்த பேரினவாதத்தின் எதிர்ப்பின் மத்தியிலும் உருவாகி இருக்கிறது.

இது முழுமையாகக் கைகூடாவிட்டாலும் ஓர் ஆரம்பம் இதனால் ஏற்பட்டிருக்கிறது.

தமிழ் இயக்கங்களின் போராட்டம் தொடர்ந்தும் வெற்றிபெற எல்லா இயக்கங்களும் ஒன்றுபட

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நாவற்குழியில் இளைஞர் பலி

யாழ்ப்பாணம், டிச. 17

நாவற்குழியில் நேற்று நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இளைஞர் ஒருவர் மரணமானார்.

மற்றொருவர் காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தில் மரணமானவர் மட்டுவிலைச் சேர்ந்த காந்தி எனத் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் சிவலிங்கம் சிவபாஸ்கரன் (வயது 24). (ஓ-10)

முல்லைத்தீவு மாவட்டத்தில்

## மீளக் குடியமர்தல் நிவாரணமாக ரூ. 2,000

யாழ்ப்பாணம், டிச. 17

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த வருட இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மக்களுக்கு மீளக்குடியமர்தல் நிவாரணமாக 2 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுவருகின்றது.

முல்லைத்தீவு செயலக வட்டாரங்கள் இந்தத் தகவலைத் தெரிவித்தன.

புதுக்குடியிருப்பு உ. அ. அ. பிரிவைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரம் பேரும், முல்லைத்தீவு உ. அ. அ. பிரிவைச் சேர்ந்த 9 ஆயிரம் பேரும்-

பாண்டியன் குளம், துணுக்காய் ஆகிய உ. அ. அ. பிரிவுகளில் தலா சுமார் 4 ஆயிரம் பேரும் விண்ணப்பித்திருக்கின்றார்கள்.

இவர்களில் புதுக்குடியிருப்பு உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 50 பேருக்கு முதல் கட்டமாக 2 ஆயிரம் ரூபா, புதுக்குடியிருப்பு இலங்கை வங்கிக் கிளையினூடாகக் கடந்த புதன்கிழமை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ஓ-5)

## மார்பு நோய் நிலையம் மீண்டும் யாழ். நகரில் இயங்கும்

யாழ்ப்பாணம் டிச 17

மார்பு நோய் சிகிச்சை நிலையம் மீண்டும் யாழ்ப்பாணத்தில் அடுத்த வாரம் முதல் இயங்கவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் மேற்கொண்டுள்ளார்.

முன்னர் யாழ்ப்பாணம் கச்சேரியடியில் இந்த சிகிச்சை நிலையம் இயங்கி வந்து, அது மூடப்பட்டுவிட்டது.

இதனால் நோயாளர் மயிலிட்டி வைத்தியசாலைக்குச் செல்லவேண்டிய கஷ்ட நிலை ஏற்பட்டது.

இந்தக் கஷ்டத்தைப் போக்குமுகமாகசிகிச்சை நிலையத்தை மீண்டும் யாழ்ப்பாணத்தில் இயங்கச் செய்வதற்காக முதலாம் குறுக்குத் தெருவில் 125ஆம் இலக்கத்தில் உள்ள வீடு ஒன்றை சுகாதாரத் திணைக்களம் வாடகைக்கு எடுத்துள்ளது. (ஓ-10)

## நகரில் இளைஞரின் சடலம்

யாழ்ப்பாணம் டிச. 17

கடந்த வியாழக்கிழமை வீட்டில் இருந்து வெளியே சென்றவர் நேற்று யாழ்ப்பாணம் பிரப்பங்குளம் லேனில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் சடலமாக மீட்கப்பட்டார்.

கொட்டடியைச் சேர்ந்த நாகலிங்கம் ஜெயபாலன் (வயது 22) என்ற இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவர்.

இவரது சடலம் யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டு மரண விசாரணை மேற்கொள்ளப்பட்டது. (ஓ-10)

## இளைஞர் மொட்டையுடன் மின்கம்பத்தில்

கரவெட்டி, டிச 17

நெல்லியடிச் சந்தியில் கடந்த வியாழக்கிழமை இளைஞர் ஒருவர் மொட்டையடிக்கப்பட்டுமின்கம்பத்தில்கட்டப்பட்டார்.

இவர் தமது இயக்கக் கட்டுப்பாட்டை மீறி செயற்பட்டதாலும் மக்கள் மத்தியில் மேற்படி அமைப்புக்கு மாறாக நடந்து கொண்டதனாலுமே இத்தண்டனை வழங்கப்பட்டதாக எழுதப்பட்ட கார்ட் ஒன்று தொங்கவிடப்பட்டிருந்தது. (ஓ-70)

சட்டம், ஒழுங்கை நிலைநாட்ட

## பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிப்பு

கொழும்பு டிச 17

ஜனாதிபதித் தேர்தலின் போது நாட்டில் சட்டம், ஒழுங்கை நிலைநாட்டத் தேவையான சகல பாதுகாப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக பொலிஸ் மா அதிபர் அறிவித்திருக்கிறார்.

வாக்களிப்பு நிலையங்களுக்கு முழுப்பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டு உள்ளது.

பிரசாரக் கூட்டங்கள் நேற்று நள்ளிரவுடன் முடிவடைந்தன.

இதனிடையில் வாக்காளர் அட்டைகள் கிடைக்காவிடினும் வாக்காளர்கள் வாக்களிக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

**இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

எம்மிடம் பல சட்டப் புத்தகங்கள் விற்பனைக்கு இருக்கின்றன. உடன் தேரில் வந்து சந்திக்கவும். இ. இ. தம்பராசன், அரசடி ஒழுங்கை, தாவடி வடக்கு, கொக்குவில். (8303)

யாழ் மணிக்கூட்டு வீதியில் ஹோட்டல் ஒன்றின் முகப்பருகில் 2½ பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 121 பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். (8232)

நல்ல நிலையிலுள்ள Honda, Chaly 50cc Motor cycles விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- சகாஸ் மோட்டோர்ஸ் & ஹொட்டெயார், ஸ்ரான்லி வீதி (இலங்கை வங்கி அருகாமை), யாழ்ப்பாணம். (8235)

2 மாத வயதுடைய அழகிய ஆண், பெண் பொமரேனியன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: M C இம்மானுவேல், 117, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். (8234)

எமது ஸ்தாபனத்தில் புதன் ஞாயிற்றுக்கிழமை தவிர சைவீஸ் செய்துகொள்ளலாம். காலை 10.00 மணி தொடக்கம் மாலை 5-45 வரை திறந்திருக்கும். அறைகளும் வாடகைக்குண்டு. யாழ் சைவீஸ், 1 ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (8208)

தற்போதைய மின்சாரத் தடை காரணமாக எமது கைவசம் இருக்கும் விற்பனையாகிய ஜெர்மன் கைப் பம்புகள் (Semi Rotary Pumps) (German) இப்பொழுது விற்பனைக்கு உண்டு. விரும்பியவர்களுக்கு மேற்குறிப்பிட்ட பம்புகள் ஒரு வருட உத்தரவாதத்துடன் பொருத்தியும் கொடுக்கப்படும். சாமுவேல், சன்ஸ் அன்கோ லிமிட்டட், யாழ்ப்பாணம் (C/910)

### நத்தார், புதுவருட வாழ்த்து மடல்கள்

திருமண அழைப்பிதழ்கள் (Printing Cards), திருமண வாழ்த்துக்கள், பிறந்தநாள் வாழ்த்துக்கள், நத்தார், புதுவருட வாழ்த்துக்கள் மற்றும் ஏனைய வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் (விசேட கழிவுண்டு) சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். அரசு வெளியீடு, 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம். (C/857)

### பூகொட ஜவுளிகள் மொத்த விற்பனை

பூகொட தயாரிப்புகளின் வெள்ளை பொப்ளின், கலர் பொப்ளின், பிஜாமா டிசைன் சலெஞ்சர், பிரிண்டெட் சலெஞ்சர், பிரிண்டெட், வெள்ளை பெட்ஷீட், 80 x 20 மற்றும் இதர இட்டங்களும் மொத்த விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம். "ராஜ்கோபால்ஸ்" 47, பெரியகடை, யாழ்ப்பாணம். (C/918)

### காணி விற்பனைக்கு

பண்டத்தரிப்பு டுடைச் சந்தி 4½ பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: பி. சிறீநடராஜ், "ராஜ்மால்" மாப்பாய் வீதி, உரும்பாய். (8133)

### கோழிக்குஞ்சு விற்பனை

நன்கு பராமரிக்கப்பட்ட 2 மாத வயதுடைய பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், ஒருமாத வெள்ளை, கறுப்பு பேட்டுக்குஞ்சுகள் தொகையாகவும் சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. 23, கடற்கரை வீதி, ஈச்சமோட்டை. (8218)

Nallur Farm Centre Prima Lohman வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள், சிவப்பு சேவற் குஞ்சுகள், Broiler குஞ்சுகள், Golden Comet சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Hyline கறுப்பு, வெள்ளை Silver பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் விநியோகிக்கப்படும். 25 குஞ்சுகளுக்கு மேல் கொள்வனவு செய்வோருக்குப் படிப்படியாக விலையில் சலுகை உண்டு. C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7686)

### இறைச்சிக்கோழி விநியோகம்

Broiler இறைச்சிக் கோழிகள், பேட்டுக் கோழிகள், சேவற்கோழிகள், சூப் குஞ்சுகள், விருத்துக் குஞ்சுகள் என்பன குறைந்த விலையில் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, C/o நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (7685)

புகுமியா இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்கப்படும். மொத்த வியாபாரிகளுக்கு கழிவு கொடுக்கப்படும். தொடர்பு: புஷ்ஸ்ரோஸ், K.K S. Road, சுன்னாகம். (8236)

## தேவை

தமிழ் ஆங்கில கொம்போஷிங் நன்கு தெரிந்த யுவதிகளும், பழக ஆர்வமுள்ளவர்களும் தேவை. நாசில், பிளாஸ்ரிக் ஓவியவேலை, பழகுவதற்கு யுவதிகள், இளைஞர்கள் தேவை. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் திறமைக்கேற்றபடி சம்பளம் உயர்த்திக் கொடுக்கப்படும். தரன் ஸ்ரூடியோ, 9 8, நவீனசந்தை மேல்மாடி, யாழ்ப்பாணம். போன்: 23858 (8222)

யாழ் மாநகர சபைக்குள் வீடு அல்லது காணி தேவை. விபரம் J P T Ltd 3 நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம் (8226)

### மணமகன் தேவை

கனடாவில் வசிக்கும் கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த யாழ் இந்து உயர் வேளாள குல 42 வயதுடைய தாரமிழந்த (விபத்தொன்றில்) குழந்தைகளற்ற படித்த அழகிய பண்பான பெண்ணுக்கு ஏற்ற மணமகன் தேவை. சாதகம் உட்பட ஏனைய விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்; 4 8, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (8228)

கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த 2? வயதுடைய யாழ் இந்து உயர் வேளாள குல (சுத்த தாவர போசன) படித்த அழகிய பெண்ணுக்கு மணமகன் தேவை. சீதனம் (வீடு தரை, காணி, ரொக்கம், நகை) வழங்கப்படும். சாதகக்குறிப்பு உட்பட ஏனைய விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: 386, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (8230)

### தவறிவிட்டது

பிரான்சிஸ் சேவியர் 521333665 V என்ற எனது அடையாள அட்டை 09 12 88 இலும் எனது மனைவியின் பிறிகாமிலி பிரான்சிஸ் சேவியர் என்ற அடையாள அட்டை 14-12-88 இலும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (8149)

துளசி - வேலாயுதம் ஆகிய எனது கைப்பையும் 616043463V இலக்க முடைய அடையாள அட்டையும் வேறு சில புகைப்படங்களும் 769 வீதி மினிபஸ்ஸில் 14 - 12 - 88 ல் தவறவிடப்பட்டன. கண்டெடுத்தோர் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (8233)

G எனும் குறியிடப்பட்ட ஒரு பவுண் எடையுடைய கல்யாண மோதிரம் யாழ் வைத்தியசாலை பஸ் நிலையப் பகுதியில் அல்லது யாழ் சுழிபுரம் வரும் வழியில 10 12 88 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மு. விசாகப்பெருமாள், சுழிபுரம் மேற்கு, சுழிபுரம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (8231)

விக்னேஸ்வரன் ஆகிய எனது 412880145V இலக்கமுடைய அடையாள அட்டையும் C. T B அடையாள அட்டையும் 11-12-88 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பாரதிபுரம் திருநெல்வேலி கிழக்கு எனும் முகவரியில் தயவு செய்து ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். (8229)

## வகுப்புகள்

ஆண்டு 10 11 18/12 வெள்ளி பி ப 3 மணி முதல் ஆரம்பமாகின்றது. Science Centre. Karaveddy (8220)

ஆண்டு 4 5 6 7,8 9. A/L 90, 89 வகுப்புக்கள் 16 12 வெள்ளி பி ப. 3 மணி முதல் ஆரம்பமாகிறது. மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. (8219)

### Spoken English

புதிய பிரிவு தூர இடங்களிலிருந்து வருபவர்கள் வசதிக்கான நேரம் பகல் 10.30 - 12 30 திங்கள்/புதன் நாட்களில் ஆரம்பம் 19-12-88 S B Iyar 12. வைமன் வீதி, நல்லூர் (8147)

### ஆங்கில / சிங்கள வகுப்புக்கள்

சனி, ஞாயிறு வகுப்புக்கள்:- தனிப்பட்ட (Individual) வகுப்பு, வீடு வந்தும் (House-visit) நேரில் அல்லது கடிதமூலம் விண்ணப்பிக்கவும். I E T. கல்வி ஸ்தாபனம், 11 B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (விவேகானந்தர் அச்சகத்திற்கு எதிர் மேல்மாடி) (8234)

### Personal English Classes

ஆண்டு 11 10 9 8 7, 6 வகுப்புகளுக்கு ஆங்கிலம் 1989 புதிய வகுப்புகள் 5-01-89 இல் ஆரம்பம்- தொடர்பு கொள்க:- V. Nagamutthu, 'Siva Illam New Chemmany Road, Nallur North Jaffna. (8148)

# பிரயாண ஒழுங்கு

★ ஜேர்மனி
(16 வயதுக்கு உட்பட்டவர்களும், மேற்பட்டவர்களும்)

★ தைவான்
(10 நாட்களுக்குள் பிரயாணம்)
சம்பளம் 12,000/-

★ இத்தாலி
(வேலை வாய்ப்புடன்)
சம்பளம் 22,000/-

★ கனடா
நேரடிப் பயணம்

**எங்கள் முகவர் மூலம் சென்றவர்கள்:**

S. செல்லச்சந்திரன், மாவடி, மாவிட்டபுரம்.

ஈசன் திருமதி ஈசன் மே/பா S காசிப்பிள்ளை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

அந்தோனிப்பிள்ளை, சால்ஸ் பெனன்டோ 7/2, மத்தீஸ் வீதி, யாழ்ப்பாணம்.

கிருபானந்தன் 41/6, ஈச்சமோட்டை, கண்டுகுளி

திரு. திருமதி ராஜசேகரம், அளவெட்டி தெற்கு, அளவெட்டி.

★ அமெரிக்கா
உடன் அனுப்பி வைக்கப்படும்

★ சிங்கப்பூர், ★ கனடாவுக்கு உடன் வீட்டுப் பணிப்பெண்கள் தேவை. சவூதி அரேபியா — பஹ்ரேய்ன், குவைத், பேரூட் நாடுகளுக்கு உடன் பயணம் செய்வதற்கான ஒழுங்கு செய்து தரப்படும்.

● பாஸ் போட் இல்லாதவர்களும் உடன் தொடர்பு கொள்க

சவூதி அரேபியா நாடுகளுக்கு வாகனச் சாரதிகள் உடன் தேவை.

**திருமதி P. டானியல்**
மில்லர் கவுஸ்,
மல்லாகம் சந்தி,
மல்லாகம
(8288)

# கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதில் பெயர் பெற்றவர் யார்?

# இன்றைய சூழ்நிலையில்

எவரின் மேல்

நம்பிக்கை வைக்கலாம்?

## டிசம்பர் 19 ஆம் திகதி தமிழ் மக்கள் எவருக்கு நம்பிக்கையோடு வாக்களிக்கலாம்?

# ஜனாதிபதி பதவி வகிக்க உகந்தவர் பிரேமதாசா அவர்களே!

(C/511)

## அரசாங்க அறிவித்தல்

# ஜனாதிபதித் தேர்தல் - 19 டிசம்பர் 1988

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடமையாற்றும் சகல அரசசேவை அலுவலர்களின் (ஆசிரியர்கள் உட்பட) கவனத்திற்கு

எதிர்வரும் 88/12/19 ஆம் திகதி நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் கடமையாற்றுவதற்கான உங்கள் நியமனக் கடிதங்கள் யாவும் உங்கள் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. தயவு செய்து உங்கள் அலுவலகங்களுக்குச் சென்று உங்கள் நியமனக் கடிதங்களைப் பெற்று அதில் குறிப்பிட்டபடி உங்கள் கடமைகளுக்குச் செல்லவும்.

நியமனக்கடிதங்கள் உங்களுக்குக் கிடைக்காவிட்டாலும் தயவு செய்து 88/12/18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணிக்கு முல்லைத்தீவு கச்சேரி தேர்தல் கிளைப்பகுதிக்கு தவறாது வருகை தரவும்.

உங்களுக்கான பயணப்படிகளுக்கு நீங்கள் உரித்துடையவர்களாவீர்.

சந்திரானந்த த சில்வா
தேர்தல் ஆணையாளர்

(C 512)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



**சோபனா தேவராஜா**
**(17 - 12 - 1988)**

புங்குடுதீவைச் சேர்ந்த தேவராஜா ராஜேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வி சோபனா தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தனது கொக்குவில் 'சமலவாசகம்' இல்லத்தில் குதூகலமாக கொண்டாடுகின்றார். இவரை அப்பா, அம்மா, அண்ணன்மார், அம்மம்மா, அப்பம்மா, பெரியம்மா, பெரியப்பா, செல்வன் மாமா, ராசன் மாமா (சுவிஸ்), சித்தப்பா, அக்காமார், ஆகியோர் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகின்றனர்

'சமல வாசகம்'
சருவேலடி லேன்,
கொக்குவில்.

(8310)

# புதிய முறைப்படி தயாரிக்கப்பட்ட DSI சைக்கிள் டயர்

ஏழை முதல் செல்வந்தர் வரை அனைவருக்கும் அதி உயர் சேவை புரியும் DSI சைக்கிள் டயர் பல சிறப்புக்களைக் கொண்டது.

1. ஒற்றைக் கம்பிக்குப் பதிலாக இறப்பர் பூசப்பட்ட 4 கம்பிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எனவே கரள் பிடிப்பதில்லை. பீடர் பழுதடைவதில்லை.
2. பருத்திக் கன்வசை விட உறுதிமிக்க நைலோன் கன்வஸ் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவே அதிக உறுதியானது. அகாலத்தில் வெடிப்பது கிடையாது.
3. அதி விசேட இறப்பர்க் கலவையினால் ஆக்கப்பட்ட பல்வேறு கட்டை வகைகள் காரணமாக விரைவில் தேய்வுறாது. அதிக காலம் பயன்படுத்தலாம்.

நம்பிக்கை வாய்ந்தது!
இடைஞ்சல் அற்றது!
நீண்ட கால பாவனைக்கு
DSI டயர்!

சாம்ஸன்,
றபர் இன்டஸ்ரீஸ் (பிறைவேற்) லிமிட்
ஜினசேன மாவத்தை,
மஹர, கடவத்தை.

யாழ்ப்பாணத்தில் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**தயா ஸ்ரீ டிஸ்றிபியூட்டர்ஸ்,**
55/11, கல்லூரி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம.
(8163)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுக் கடைகளுக்கு மா விநியோகம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், டிச 17

கடந்த செவ்வாய்க்கிழமை காங்கேசன்துறை முகத்திற்குக் கொண்டுவரப்பட்ட கோதுமை மா, வியாழன் முதல் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருகின்றது

யாழ். செயலக அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

'சடவத்தை' என்ற கப்பல் மூலம் 950 மெட்ரிக் தொன் மா வந்து சேர்ந்தது

இந்தக் கப்பல் மீண்டும் ஒரு முறை இதே அளவு மாவை ஏற்றிக் கொண்டு இன்னும் சில தினங்களில் காங்கேசன் வரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ 5)

## யாழ் கல்வித் திணைக்களத்தில்:

# உடற்பயிற்சிக் கல்வி நெறி

யாழ்ப்பாணம், டிச. 17

யாழ் கல்வித் திணைக்களத்தில் மூன்று மாத உடற்பயிற்சிக் கல்வி நெறி ஒன்று நடத்தப்படவுள்ளது.

பயிற்சி நெறியின் முடிவில் கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் ஒன்றும் வழங்கப்படும்.

நாட்டின் தென்பகுதியில் உள்ள கல்வித் திணைக்களங்களில் இவ்வாறான பயிற்சிநெறிகள் ஏற்கெனவே நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

யாழ் கல்வித் திணைக்களத்தில் முதல் முறையாக இப்பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சி நெறியை ஆரம்பிப்பதற்கு உடற் பயிற்சியாளர்களைக்கொண்ட குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது.

நேற்று யாழ் கல்வித் திணைக்களத்தில் இந்தப் பயிற்சிநெறி தொடர்பான அங்குரார்ப்பணக் கூட்டம் கல்விப் பணிப்பாளர் திரு. வெற்றிவேல் சபாநாயகம் தலைமையில் நடைபெற்றது.

பயிற்சிநெறி முடிவில் வழங்கப்படும்சான்றிதழ் உடற்பயிற்சி ஆசிரிய நியமன விண்ணப்பத்திற்கு ஏற்புடையதாகும் என்றும் —

யாழ் மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் இந்தப் பயிற்சிநெறியை முடித்து வெளியேறுபவர்களை வசதிக் கட்டண ஆசிரியர்களாக அமர்த்திக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## சரக்கு ரயில்

யாழ்ப்பாணம், டிச 17

எரிபொருள், உணவுப் பொருள், மருந்துப் பொருள் என்பவற்றை ஏற்றிக் கொண்டு சரக்கு ரயில் ஒன்றுவியாழனன்று யாழ்ப்பாணம் வந்தது

இலங்கை மின்சார சபைக்கான 90 ஆயிரம் லீற்றர் ஹெவி டீசலும், 45 ஆயிரம் லீற்றர் பெற்றோலும், 45 ஆயிரம் லீற்றர் டீசலும், 45 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணையும் இதில் கொண்டு வரப்பட்டன.

மேலும் மூன்று'வகன்களில் சீனி, பருப்பு, மருந்துப் பொருள்கள் என்பனவும் வந்தன. (ஒ 5)

## மீண்டும் இயங்க வைக்க முயற்சி

வடமாராட்சி, டிச. 17

பருத்தித்துறை நவீன சந்தை பஸ் நிலையம் போன்ற வற்றை மீண்டும் இயங்கவைப்பதற்கான முயற்சிகளை இந்திய இராணுவத்தினர் மேற்கொண்டு வருகின்றார்கள்.

தற்போது போக்குவரத்து வாகனங்கள், காய்கறிச் சந்தை போன்றன மருதடி முருகையன் கோயிலுக்குச் சமீபமாகவே இயங்கி வருகின்றன. (சி 160)

# 191 புள்ளிகள் பெற்று முதல் இடம்



யாழ்ப்பாணம் டிச 17

கல்வித்திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 6 ஆம் ஆண்டு புலமைப் பரிசுப் பரீட்சையில் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த சங்கரலிங்கம் காந்தரூபன் 200 புள்ளிகளுக்கு 191 புள்ளிகளைப் பெற்று அகில இலங்கையிலும் யாழ். மாவட்டத்திலும் முதலாவது இடத்தைப் பெற்றார்

தண்ணீரூற்று முள்ளியவளையைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் திரு. நா. சங்கரலிங்கத்தின் புதல்வராவார். (ச)

# கொள்ளையர் தொல்லை நகரில் தொடர்கிறது

## இரவில் எல்லாத்திசைகளிலும் ஓலம்

யாழ்ப்பாணம், டிச.17

யாழ்நகரில் கொள்ளையர்களின் தொல்லை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இதனால் இரவு வேளைகளில் பொதுமக்களின் ஓலங்களும் மணிஓசைகளும் தகரச் சத்தங்களும் கூச்சல்களும் எல்லாத் திசைகளிலும் தினமும் கேட்ட வண்ணம் இருக்கின்றன.

கடந்த புதன்கிழமை இரவுசுண்டிக்குளி, பாரதிலேன் மற்றும் கச்சேரியை அண்டிய பகுதிகளில் கொள்ளையர்கள் நடமாட்டத்தை அவதானித்த பொதுமக்கள் கூச்சலிட்டு பலவித சத்தங்களை எழுப்பினர்

கடந்த திங்கள், செவ்வாய் ஆகிய தினங்களிலும் அத்தியடி, கோவில் வீதி, சச்சேரியடி ஆகிய பகுதிகளில் கொள்ளையர் நடமாட்டம் இருந்தது என பொதுமக்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்படுகிறது. (ஒ 5)

# தாய்மாருக்கு விறகு வெட்டும் கருவிகள்

யாழ்ப்பாணம், டிச 17

மன்னார் துயர்துடைப்புச் சங்கம், விறகுவெட்டிப்பிழைக்கும் தாய்மார்கள் 150 பேருக்கு உபகரணங்களைவழங்கும் வைபவத்தை அண்மையில் நடத்தியது.

மன்னார் மறை மாவட்ட ஆயர் வணக்கத்திற்குரிய தோமஸ் சவுந்தாநாயகம் உபகரணங்களைத் தாய்மார்களுக்கு வழங்கினார்.

இந்த உபகரணங்கள் குழந்தைகள் நலநிதியத்தின் உதவியினால் வழங்கப்பட்டன. (இ-5)

# முல்லைத்தீவு -முள்ளியவளை: ஐந்து தடுப்பு முகாம்கள்

ஒட்டுசுட்டான் டிச 17

முல்லைத்தீவிலிருந்து முள்ளியவளை வரையிலான 5 மைல் தூர இடைவெளியில் ஐந்து தடை முகாம்கள் போடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு பெருந்தெருக்கள் திணைக்களச் சந்தி, சிலாவத்தை, 3 ஆம் கட்டை, முள்ளியவளை ஆஸ்பத்திரியடி காட்டு விநாயகர் சந்தி ஆகியவற்றிலேயே இவை போடப்பட்டுள்ளன.

இதேவேளை 3-ஆம் கட்டை, ஆஸ்பத்திரியடி, காட்டு விநாயகர் சந்தி, ஒட்டுசுட்டான் ஆகிய முகாம்கள் விஸ்தரிக்கப்பட்டு கூடுதலான சென்றிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. (ச-113)


# அஜந்தாஸ் ஸ்ருடியோ

நெல்லியடி

பருத்தித்துறை, யாழ்ப்பாணம் பிரதான வீதியில் வட சென்றல் மகளிர் பாடசாலைக்கு அருகில் உள்ளது.

குறிப்பு: மின்சாரம் தடைப்பட்டாலும் ஜெனரேட்டர் மூலம் படம் பிடித்துக் கொடுக்கடபடுகிறது.

(8289)

# Y. W. C. A

யாழ்நகரில் - விடுதி/தங்குமிட வசதிகள் கல்லூரி மாணவிகளுக்கும், வேலை பார்க்கும் இளம் பெண்களுக்கும் உண்டு

தையற்கலை, சமையற்கலை, கேக் அலங்காரம், அழகியற்கலை, சிகையலங்காரம், ஆங்கிலப் பேச்சு (Spoken English), சுருக்கெழுத்து, தட்டச்சு, கிற்றூர் என்பனவற்றிற்குப் பயிற்சிகள் சிறந்த தேர்ச்சி பெற்ற ஆசிரியைகளால் நடாத்தப்படுகின்றன.

மற்றும் மணப்பெண்ணிற்கு அலங்காரம் செய்யப்படும் பூச்செண்டுகள், கேக் அலங்காரம், தையல என்பன ஓடர்களுக்கு செய்து கொடுக்கப்படும்.

தகவல்களுக்கு:

தலைவி

யாழ். Y. W. C. A

99, சப்பல் வீதி,

யாழ்ப்பாணம்.

(C-925)

உஷா

உன்னதமான தையலுக்கு



உஷா லிக் லாக் எக்ஸலா 55

- 55 டிசைன் அச்சுக்கள்
- பிக்கொட் விளிம்புத் தையல் ஊசி வழங்கப்படும்
- தன்னியக்க தெற்றி ஒட்டை
- தனி ஊசி ஓவர்லொக் தையல்
- அழகான ஷ்கலொப்தையல்
- இரட்டை ஊசி வழங்கப்படும்

ரூபா 7,850/-

சகல பாகங்களும் உலோகத்தினால் செய்யப்பட்டுப் பிளேட் பண்ணப்பட்டவை, ஒரு வருட உத்தரவாதம் - தவனை முறையில் பணம் செலுத்தலாம்.

உதிரிப் பாகங்கள் தாராளமாகக் கிடைக்கும் நாடு முழுவதிலும் விற்பனையாளர்கள் உண்டு.

உஷா

+
J. M. J.

# அடுத்த இரண்டு வாரங்களுக்குள்

# கனடா CANADA பயணம்!

எஸ். பி. அன்ரன் வழங்கும் வெளிநாட்டுப் பயண ஒழுங்குகள்

ஆச்சரியம் தான்; ஆனல் இது உண்மை!

இவ்வருடத்தில்

கனடாவுக்கான எமது இறுதிக்குழு இம்மாதம் நடுப்பகுதியில் இலங்கையை விட்டுப் புறப்படவிருக்கிறது.

இக்குழு கிறிஸ்மஸ் பண்டிகையைக் கண்டிப்பாகக் கனடாவில் கொண்டாடும் எனறு

★ உறுதியுடனும் மகிழ்வுடனும் அறியத் தருகின்றோம்! ★

எனவே,

உங்கள் வாழ்வை வளம்படுத்துவதற்கான

இந்த இறுதிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள முந்துங்கள்!

மேலும் விபரங்களுக்கு

உடனே

நேரில் வருகை தருமாறு ★ அன்புடன் அழைக்கின்றேன் ★

உங்கள் பயண அமைப்பாளர்: எஸ். பி. அன்ரன்

No. 648 1/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக)

(C-490)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FORTUNA ENTERPRISES

## வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள்

(Labour Licence No: 79)

1. தைவான்

தொழிற்சாலைத் தொழிலாளர்
(Unskilled Factory Workers)
சம்பளம் — ரூபா 12, 000/ +
இருப்பிட வசதி
(ஆங்கில அறிவு அவசியமானது)
வயது - 22 — 32

2. குவைத்

தொழிலாளர் Labourers
சம்பளம் 30 KD — 3300 +
இருப்பிடவசதி

முற்பணம் அறவிடப்படமாட்டாது

நாடவேண்டிய முகவரி:-
யாழ்ப்பாணப் பிரதிநிதி

**இ. விஸ்வேஸ்வராயன்**
3 ஆம் கட்டை லேன்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

(C/922)



## எமது நேற்றைய புதிய வெளியீடுகள்

(1) சீதா ✶ நிஷாந்தி ✶ ரேகா
சரண்யா ✶ பல்லவி
ஆகிய ஐந்து கதாநாயகிகளுடன் இணைந்து
அர்ஜுன் வழங்கும்

# 'தாயம் ஒண்ணு'

(ORIGINAL பிரதி)

(2) பாண்டியராஜன் ✶ ஊர்வசி
S. S சந்திரன் ✶ மனோரமா
✶ சிலுக்கு
A V M இன்

# பாட்டி சொல்லைத் தட்டாதே

(PYRAMID ORIGINAL)

**குணம்** வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(C/941)


## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி



சுந்தையா ஜெயலட்சுமி அம்மா

தோற்றம்: 29 - 03 - 1908
மறைவு: 28 - 12 - 1987

திதி: நவமி (17.12. 988)

எங்கள் இல்லத்தின் தெய்வமாக துலங்கி, எங்கள் நல்வாழ்வுக்கு வழிகாட்டியாய் விளங்கிய எமது அன்புத்தாயே எங்களைத் தவிக்கவிட்டு நீங்கள் இறைவனடி சேர்ந்த போதும், உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு என்றுமே நீங்காது. உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

"விஜயபவனம்"
தேவாலய வீதி,
சங்கானை.

(C-935)

## அரசாங்க அறிவித்தல்

## சனாதிபதித் தேர்தல்,

## 19 டிசம்பர் 1988

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கடமையாற்றும் சகல அரச சேவை அலுவலர்களின் கவனத்திற்கு. (ஆசிரியர்கள் உட்பட)

எதிர்வரும் 19-12-88ஆம் திகதி நடைபெறவிருக்கும் சனாதிபதித் தேர்தலிலே கடமையாற்றுவதற்கான உங்கள் நியமனக் கடிதங்கள் யாவும் உங்கள் அலுவலகங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன. தயவுசெய்து உங்கள் அலுவலகங்களுக்குச் சென்று உங்கள் நியமனக் கடிதங்களைப் பெற்றுக்கொண்டு தவறாது, அக்கடிதங்களிலே குறிப்பிட்டபடி டிசம்பர் 18ஆம், 19ஆம் திகதிகளில் உங்கள் கடமைகளுக்குச் செல்லவும்.

நியமனக் கடிதங்கள் உங்களுக்கு (ஆசிரியர்கள் உட்பட) கிடைக்காவிட்டாலும் வாக்கெடுப்பு நிலையங்களிலே சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர்களாகவும், கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்களாகவும், எழுதுவினைஞர்களாகவும் கடமை புரியத் தகுதிவாய்ந்த அரச அலுவலர்கள் யாவரும் தயவுசெய்து 17-12-88 ஆம் திகதி சனிக்கிழமை மு. ப. 9.00 மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரிக்கு அருகாமையில் அமைந்துள்ள வை. எம். சி. ஏ. கட்டிடத்திற்கு வருகை தரவும்.

இத்தேர்தலிலே கடமையாற்றவிருக்கும் சிரேட்ட / கனிட்ட தலைமைதாங்கும் அலுவலர்களுக்கும், வாக்கெடுப்பு எழுதுவினைஞர்களுக்கும் அவர்களுடைய கடமைகள் பற்றி விளக்கும் அறிவுரை வகுப்புகள் இம்மாதம் 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளிலே மு. ப. 9.30 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் புனித ஜோன் கல்லூரியிலே நடைபெறுகின்றன. இவ் வகுப்புகளுக்கு தவறாது சமுகமளிக்கவும்.

உங்களுக்கான போக்குவரத்துச் செலவுகள் கொடுக்கப்படும்.

சந்திரானந்த த சில்வா
14-12-1988 தேர்தல் ஆணையாளர்.

(C 801)


# M. Three Travel

பெருமையுடன் வழங்கும்

## உடனடி வேலைவாய்ப்புக்கள்

கீழ்க்காணும் வெற்றிடங்கள் தற்போது எம்மிடம் உண்டு

✦ **BHARIN** பாறின்

18 வயதிற்கு மேல்

(1) Carpenter - தச்சுவேலையாட்கள்
(2) Auto Diesel Petrol Mechanic - ஓட்டோ டீசல் பெற்றோல் மெக்கானிக்
(3) Auto Electricians - ஓட்டோ எலக்ரீசியன்ஸ்
(4) Mason - மேசன்

நம்பிக்கை, நாணயம் என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

# M THREE TRAVEL

★ புதிதாக கடவுச்சீட்டு செய்பவர்களுக்கு ஒரு கிழமையில் கடவுச்சீட்டு எடுத்துக் கொடுக்கப்படும்.

★★ எங்களிடம் புதுக்கடவுச்சீட்டு செய்பவர்கள் எங்கள் மூலம் வேலைவாய்ப்புப் பெற்றுச்செல்ல விரும்பினால் உடனடியாக விசா செய்து கொடுக்கப்படும்.

★★★ (Bond) பொன்ட் செய்து கொடுக்கப்படும்.

இவை எல்லாவற்றிற்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

# த. இந்திரநாதன்

"இந்திரபவனம்"
சேர்தி லேன்,
கல்லூரி வீதி,
காங்கேசன்துறை.

No 1, 2ஆம் ஒழுங்கை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(C 934)


## MASTER OF ARTS

## Qualifying Examination

## 1987/88

The candidates who have been selected to sit for the above examination have already been informed and have been requested to apply to the Examination Branch before 30 November 1988. Those who have not received these letters are requested to contact the Dean's Office, Faculty of Arts without delay.

Applications to sit for the above examination will be received till end of December 1988.

Registrar
University of Jaffna
15-12-88

(C-506)


## நத்தார் புதுவருட பண்டிகையை முன்னிட்டு

## ★ மலிவு விற்பனை ★

கேக் தயாரிக்கும் பொருட்களான:-

பிளம்ஸ், கஜு, கரண்ஸ், றேசன்ஸ்,

கொழும்பு Charsons இன்டஸ்றீஸ் சாசன் தயாரிப்புக்களான

பெக்கிங் பிறிசேவ், ஜிஞ்சர், சவ் சவ், கன்றிபீல்ஸ், செரிஸ், எசன்ஸ், வகைகள்
ஜாம் வகைகள், அஸ்ரா மாஜரீன், அங்கர் பட்டர், குளிர்பானம் தயாரிப்பதற்கான எசன்ஸ் வகைகள்
பேக்கரிக்குத் தேவையான பொருட்களும்
ஐஸ்கிறீம் தயாரிப்பதற்கான பொருட்களும்

ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்

# ★ புஸ்பா ரேடர்ஸ் ★

முகவரி:
புஸ்பா ரேடர்ஸ்
"எசன்ஸ் கவுஸ்"
11/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 24237

(8137)



Sri Ram

# மலிவு விற்பனை

## நத்தார் புதுவருட பண்டிகையை முன்னிட்டு

## கேக் தயாரிக்கும் பொருட்களான

பிளம்ஸ் கஜு, கரண்ஸ், றேசன்ஸ், பேக்கிங் பிறிசேவ் ஜாம் வகைகள், ஜிஞ்சர், சவ்சவ் கன்றபீல்ஸ், செரீஸ், எசன்ஸ், அஸ்ரா மாஜரீன் (பெரிது, சிறிது), குளோப் பட்டர், அங்கர் பட்டர், றெமியா மாஜரீன், பெமிப் பான் ஈஸ்ட், Hyco, Moja

சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் நகரில் றெமியா மாஜரீன், குளோப் பட்டர் முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதனை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம்.

| | | |
|---|---|---|
| றெமியா மாஜரீன் (ஹொலண்ட) | 250 g | 13-50 |
| குளோப்பட்டர் | 113 g | 13 50 |
| குளோப்பட்டர் | 227 g | 26-00 |

வியாபாரிகளுக்கு விசேஷட கழிவு வழங்கப்படும்.

இன்றே தொடர்பு கொள்ளவும்:

# SRI SAI STORES

# ஸ்ரீ சாயி ஸ்ரோர்ஸ்

141, நவீனசந்தை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(C-930)



# மீண்டும் வழமைபோல் விற்பனைக்கு உண்டு!!

Keels Products

Mutton Beef Chicken, Pork Sausages Bacon, Meat Balls etc......

Carnivel Ice Cream
('காணிவல்' ஐஸ்கிறீம்)

பமிலி புளக் (Family Block), கப்ஸ் (Cups) பலவகையான சுவைகளில்

Andreiz Products

உடைத்த இறால், சிங்கறால், கணவாய், கணவாய்முட்டை, அறுக்குளா பாரை மீன் etc.........

Eggs (முட்டை)

Broilers

புரொய்லர் கோழி இறைச்சி

விநியோகஸ்தர்:

## மெடிக்கல் ஹோல் டிஸ்பென்சறி

22, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:
ஜெனரேட்டர் உதவியுடன் மின்சாரம் பெறப்படுவதால் பொருட்களின் தரம், சுவை என்பன உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.

(C/942)


## M. A. (PRELIMINARY) EXAMINATION - 1988

The above examination will be held in April 1989 and the necessary forms have already been sent to the candidates requesting them to apply for the examination before 31st December, 1988. Those who have not received these forms are requested to contact the Dean's Office, Faculty of Arts.

Registrar
University of Jaffna.
15-12-1988.

(C-505)


## வெஸ்பா (L. M. L Vespa)

ஸ்கூட்டர் வாங்க முன்கூட்டியே பதிவு செய்யுங்கள்

விபரம்:
J. P. T. Ltd,
3, நவீனசந்தை (மேல்மாடி),
யாழ்ப்பாணம்.

(8278)



## ஆங்கிலத்தில் பேச வேண்டும் என்ற விருப்பம்- ஆனால் தவறாகப் பேசி விடுவோமோ என்ற தயக்கம்-

# இதுதானே உங்களது பிரச்சினை?

பரீட்சையில் சித்தி பெற்றவர்களிடம் கூட இக்குறை காணப்படுகிறது. இதற்கான காரணம் நாம் பாடசாலைகளில் படிக்கது

WRITTEN ENGLISH

ஆனால் நடைமுறையில் நாம் பிறரிடம் உரையாடத் தேவைப்படுவது

SPOKEN ENGLISH

எனவே முறையான பயிற்சி இருந்தால் யாருடனும் சாதாரணமாக ஆங்கிலத்தில் உரையாட முடியும்.

இதனைக் கருத்திற் கொண்டு

**BRIGHT TRAINING CENTRE**

நிறுவனத்தினர் மிக இலகு நடையில் அமைந்த தபால் முறையில் மிகச் சிறந்த பயிற்சி நெறியினை அறிமுகப்படுத்துகிறார்கள்.

உளவியல் அடிப்படையில், மிக மிகப் புதுமையான முறையில்

SPOKEN ENGLISH

பயிற்சி நெறியினை மூன்றே மாதங்களில் கற்றுத் தேறலாம்,

விபரங்களுக்கு முத்திரையொட்டிய சுய விலாசத்துடன் தொடர்பு கொள்க:

# BRIGHT TRAINING CENTRE

P. O. Box 162, Colombo.

(7983)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொய்யாமொழி**

**குறள்:**

இனம்போன்று இனமல்லார்
சேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

**பொருள்:**

இனம் போலவே இருந்து உண்மையில் இனம் அல்லாதவரின் நட்பு, பொதுமகளிரின் மனம் போல உள்ளொன்று புறமொன்றாக வேறுபட்டு நிற்கும்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
17-12 88 த பெ இல 23

# மீண்டும் அந்த வசனம்!

முன்னர் பல தடவைகள் கேட்ட வசனம் மீண்டும் காதில் வந்து விழுகிறது!

"தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள்" என்ற அந்த வசனம் அவலக் குரலாக ஒலிக்கிறது.

தென்னிலங்கைச் சிறையில் அளவொணா சித்திரவதைகளையும், கஷ்டங்களையும் அனுபவித்து, விடுதலையானவர்களிடம் இருந்து இம்முறை இந்த விநயமான வேண்டுகோள் வந்திருக்கிறது.

மறுக்கப்பட்ட தமது உரிமைகளுக்காகப் போராடிய ஒரே காரணத்துக்காக, ஆயிரக்கணக்கான தமிழ் இளைஞர்கள் கேள்வி முறையின்றி, நீதிமன்ற விசாரணை இன்றி இராணுவத் தடுப்பு முகாம்களிலும், சிறைகளிலும் அடைக்கப்பட்டார்கள்.

1987 ஜூலை 29 இல் கைச்சாத்தான இலங்கை - இந்திய ஒப்பந்தம் சகல தமிழ் அரசியல் கைதிகளுக்கும் மன்னிப்பு அளித்து அவர்களை விடுதலை செய்யும் எனக் கூறப்பட்டது.

அதனால், எப்படியும் ஒருமாத காலத்திற்குள், தாக்கு நல்லகாலம் பிறந்துவிடும் என்று சகல தமிழ் அரசியல் கைதிகளும் நம்பியிருந்தார்கள். இலங்கை அரசு ஒப்பந்தத்துக்கு மதிப்பளித்து தங்களை விடுவிக்கும் என எதிர்பார்த்தார்கள்,

ஆனால், அவர்களில் பலரின் நம்பிக்கை இன்று வரை கனவாகவே நீளுகிறது. ஒப்பந்தம் கைச்சாத்தான 1987 ஜூலையில் இருந்து கடந்த அக்டோபர் வரையான பதினறு மாத காலத்தில், இராணுவத் தடுப்புக் காவலுக்குப் பெயர்பெற்ற பூசாவிலும், வெலிக்கடைச் சிறையிலும், தமிழ் அரசியற் கைதிகள் சுமார் பத்து முறையாவது உண்ணாவிரதப் போராட்டம் நடத்தியிருப்பர். அவர்களுக்கு ஆதரவாக பொதுமக்கள் ஸ்தாபனங்களும் உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்தின.

ஆகக் கடைசியாக கடந்த செப்டம்பர் 30 ஆம் திகதி முதற்கொண்டு அக்டோபர் 27 ஆம் திகதிவரை, ஆரம்பத்தில் பூஸாவிலும் பின்னர் வெலிக்கடைக்கு (மகசீனுக்கு) மாற்றப்பட்ட நிலையிலும், தண்டிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருந்தனர். பிந்திய கட்டத்தில் ஏனைய சகல தமிழ் அரசியல் கைதிகளும் உண்ணாவிரதம் இருந்தனர்

உயிர் துறப்பைத்தடுத்து, உலக அரங்கில் தமக்கு ஏற்படக்கூடிய அவமானத்தைத் தவிர்க்கும் வழமையான நடைமுறையில் மூன்று உண்ணாவிரதிகளின் உயிர்கள் எந்த நேரமும் பிரியலாம் என்ற நிலையில் விரைவில் விடுவிப்போம் என்ற உறுதிமொழியுடன் போராட்டத்துக்கு முடிவு கட்டப்பட்டது; முறியடிக்கப்பட்டது.

ஆனால் வாரங்கள் ஏழு கடந்தும் 152 தமிழ் அரசியல் கைதிகள் இன்னமும் வெலிக்கடை மகசின் சிறையில் இருக்கிறார்கள் நீதிமன்றம் விடுதலை செய்த சிலரும் அதில் அடங்குவர் என்ற திடுக்கிடும் தகவலும் உண்டு.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு வெலிக்கடை சிறை உடைக்கப்பட்டு, மோதல் நடந்த போது 152 தமிழ்க் கைதிகள் அங்கிருந்தனர். 1983 இல் வெலிக்கடையில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு நடந்த கோர நிகழ்ச்சி - காட்டுமிராண்டித்தனமான சறைபிடித்த நிகழ்ச்சி - ஈழத் தமிழர் நெஞ்சை நெருடிய நிகழ்ச்சி - சோக சரித்திரமாகி விட்டது

அந்த அனுபவம் மீண்டும் தங்கள்சககைதிகளுக்கு ஏற்படக்கூடாது என்று விடுவிக்கப்பட்ட கைதிகள் நெஞ்சம் ஏங்குவதில் என்ன தப்பு?

ஆகக் கடைசியாக நடந்த தமிழ்க்கைதிகள் உண்ணாவிரதத்தை கைவிடுமாறு இந்திய அரசும், தமிழர் இயக்கங்கள் இரண்டும் கேட்டிருந்தன.

எனினும் 152 தமிழ் அரசியல் கைதிகள் இன்னும் சிறைப்பறவைகளாக நெடிந்து கொண்டிருக்கிறார்கள் என்பது கவலைக்குரியதாகும். இலங்கை அரசினர் - குறிப்பாக அமைச்சர் அத்துலத்முதலியும் ஜனாதிபதி ஜே. ஆரும் -- எலோர் மீதும் சதிரை விடுகிறார்கள் என்பது தொடர்ந்து நிரூபணமாகிக் கொண்டிருக்கிறது!

"இந்தக் கடைசி நம்பிக்கையும் காப்பாற்றப்படாமல் போகுமிடத்து சாக்காட்டை நோக்கிய எமது மரணயாத்திரை மீண்டும் ஆரம்பமாகும்" என்று மகசீன் சிறையில் உள்ள தமிழ்பேசும் அரசியல் கைதிகள் கடந்த அக்டோபர் 27 ஆம் திகதி தெரிவித்திருந்தனர் அந்த நிகழ்ச்சியைத் தமிழர்கள் காண நேரிடுமோ?

# தனித்துப் போட்டியிட்டு ஆட்சியைப் பிடிப்போம்; காங்கிரஸுக்கு ஜெயலலிதா சவால்

சென்னை, டிச 16

தனித்துப் போட்டியிட்டு ஆட்சியைப் பிடிப்போம் என்று அ தி மு க ஜெ அணியின் பொதுச் செயலாளர் ஜெயலலிதா தெரிவித்தார்.

தமிழ் நாடு சட்டசபைத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது என்று இந்திரா காங்கிரஸ் அறிவித்தது பற்றி முதல் தடவையாக ஜெயலலிதா கருத்து வெளியிட்டார். அப்போது அவர் சொன்னதாவது;

ஓராண்டு காலம் நடுங்கிக் கொண்டிருந்த காங்கிரஸுக்கு இப்போதாவது துணிவு பிறந்தது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

கூட்டு அமைக்கும் விஷயம் குறித்து எம்மிடமிருந்து காங்கிரஸ் எதிர்பார்த்தவை யதார்த்த பூர்வமானவையல்ல.

நாட்டு நிலைமையை அவர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

**தமிழ்நாடு தேர்தல்களம்**

தேர்தலின் போது மக்கள் உண்மை நிலையை காங்கிரஸுக்குப் புரிய வைப்பார்கள்

எப்படியாவது எந்த ஒரு கட்சியுடனும் கூட்டணி அமைக்க வேண்டும் என்பது எமது நிலை அல்ல.

மத்திய அரசுடன் நல்லுறவை வைத்துக் கொள்ள வேண்டும் என்ற எம். ஜி. ஆரின் கொள்கையைக் கைவிடக் கூடாது என்பதற்காகவே நாம் இது வரை காங்கிரஸுடன் கூட்டு வைக்க விரும்பினோம்.

மத்திய அரசை நடத்தும் கட்சியாக காங்கிரஸ் இருப்பதே அதற்குரிய காரணமாகும்

இப்படி ஜெயலலிதா தெரிவித்தார்.

ஜெயலலிதா அணியின் துணை பொதுச் செயலாளர் எஸ். டி. சோமசுந்தரம் கருத்துத் தெரிவிக்கையில்,

"கூட்டணி அமைப்பதற்காக நாம் ஒரு கட்சியிடமும் பிச்சை எடுக்கத் தேவையில்லை" என்று சொன்னார். (எ)

# பெனுஸிர் அரசு எதிர்நோக்கும் அரசியல்-இன நெருக்கடிகள்

இஸ்லாமபாத், டிச.16

கராச்சியில் நேற்று மீண்டும் ஏற்பட்ட இனக் கலவரத்தில் ஆறு பேர் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

உணவு விடுதி ஒன்றினுள் இருந்தவர்கள் மீது ஓடிக்கொண்டிருந்த காரினுள் இருந்து துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அப்போது இந்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டன.

கிரிக்கெட் போட்டி ஒன்று தொடர்பாக ஏற்பட்ட தகராறு காரணமாக ஏற்பட்ட மோதல் இது என வர்ணிக்கப் பட்டது

இந்தியாவில் இருந்து சென்று குடியேறிய மொஜஹீர் இனத்தவர் மீது நடத்தப் பட்ட தாக்குதல் இது என கூறப்பட்டது

திருமதி பெனுஸிர் பூட்டோ அரசு பதவிக்கு வந்த பின்னர் இடம் பெற்ற முதலாவது இன மோதல் சம்பவமாக இது அமைகிறது

இதேவேளை திருமதி பெனுஸிர் அரசியல் நெருக்கடி ஒன்றையும் சமாளிக்க வேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளார்.

26 நாள் மட்டுமே இயங்கிய பலுசிஸ்தான் மாகாணசபை கலைக்கப் பட்டதால் இந்த நெருக்கடி எழுந்திருக்கிறது.

பிரதமரின் தூண்டுதல் காரணமாகத்தான் பலுசிஸ்தான் மாகாணசபையைக் கலைக்கும்படி அதன் முதலமைச்சர் சிபார்சு செய்தார் என்று இஸ்லாமிய ஜனநாயக முன்னணி நேற்று நாடாளுமன்றத்தில் குற்றஞ் சுமத்தியது.

இதை திருமதி பெனுஸிர் மறுத்தார். மாகாணசபை கலைப்பு விஷயம் எனக்கே தெரியாத ஒன்று என்று அவர் சொன்னார்.

இதனிடையில் கலைக்கப்பட்ட பலுசிஸ்தான் மாகாண முதலமைச்சரை முஸ்லிம் லீக் தனது கட்சியில் இருந்து வெளியேற்றி விட்டது.

முதலமைச்சர் ஜமாலி மக்கள் கட்சி உறுப்பினர்களுடன் சேர்ந்து கூட்டு அரசை பலுசிஸ்தானில் அமைத்திருந்தார். (எ)

## ராஜீவின் சீன விஜயம்

புதுடில்லி டிச 16

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தனது 5 நாள் சீன விஜயத்தை இம் மாதம் 19 ஆம் திகதி ஆரம்பிக்கிறார்.

30 ஆண்டுகளுக்கு பின்னர் இந்தியப் பிரதமர் ஒருவர் முதல் தடவையாக இப்போது தான் சீனு விஜயம் செய்கிறார். (எ)

பலஸ்தீன விடுதலை இயக்கம் மீதான:

# 30 ஆண்டு காலத் தடையை அமெரிக்கா நீக்கியது!

பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் நேரடிப் பேச்சுக்களை நடத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை நேற்று அமெரிக்க அதிபர் றேகன் நீக்கிவிட்டார்.

30 ஆண்டுகளுக்கு முன்னர் இத்தடையை அமெரிக்க அரசு விதித்திருந்தது.

பலஸ்தீன விடுதலை இயக்கத்தலைவர் யாசிர் அரபாத் ஜெனிவா ஐ. நா பொதுச்சபைக் கூட்டத்தில் நிகழ்த்திய பேச்சுக்களைத் தொடர்ந்து ஏற்பட்ட திருப்பம் காரணமாக, நேரடிப் பேச்சுக்களை அந்த இயக்கத்துடன் நடத்த அமெரிக்க அரசு தீர்மானித்து உள்ளது தெரிந்ததே

அதற்கு வழி செய்யுமுகமாகவே, 30 ஆண்டு காலத்தடையை அதிபர் றேகன் நீக்கிவிட்டார்.

"இருப்பினும் இஸ்ரவேலுக்கான முழு ஆதரவும் நாம் வழங்குவோம்"— என்றும் அதிபர் றேகன் தெரிவித்தார்.

இதேவேளை— துனிஸியாவில் உள்ள அமெரிக்கத்தூதர் முதல்தடவையாக தொலைபேசிமூலம் பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு பேசினார்

இதுவே 30 ஆண்டு கால இடைவெளியின் பின்னர் அமெரிக்க அரசு உத்தியோக பூர்வமாக பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன்கொண்ட முதல் தொடர்பு என வர்ணிக்கப்பட்டது.

## சிவாஜி கட்சி 50 தொகுதிகளில் போட்டியிடும்

சென்னை டிச 16

தமிழ் நாடு சட்டசபைத் தேர்தலில் 50 தொகுதிகளில் சிவாஜி கணேசன் தலைமையிலான தமிழர் முன்னேற்ற முன்னணி போட்டியிடும் என்று அறிவிக்கப் படுகிறது.

அ. தி. மு. க ஜானகி அணியுடன் ஏற்பட்ட தேர்தல் உடன்பாட்டில் தொகுதி ஒதுக்கீடு இடம் பெற்றிருப்பதாக சிவாஜி கணேசன் அறிவித்தார்.

ஜானகி அம்மையாருடன் சேர்ந்து அவர் கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டார்.

தொகுதிப் பங்கீட்டின் படி எஞ்சிய தொகுதிகளில் ஜானகி அணி போட்டியிடும். (எ)

## நாடாளுமன்ற இடைத்தேர்தல் கிடையாது

தமிழ் நாட்டில் காலியாக உள்ள கரூர், மதுரை நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்கள் சட்டசபைத் தேர்தலுடன் நடத்தப்பட மாட்டாது என்று தேர்தல் கமிஷன் அறிவித்திருக்கிறது. (எ)

## இந்தியாவில் வாககளிக்கும் வயது 18

இந்தியாவில் வாக்களிக்கும் வயது 18 ஆகக் குறைக்கப்பட்டது.

இது சம்பந்தமாக அரசமைப்புச் சட்டத்தைத் திருத்தும் சட்ட மூலம் நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதுவரை காலமும் வாககளிக்கும் வயது 21 ஆக இருந்தது.

# மாகாணசபையின் நிலைகுறித்து புதிய ஜனாதிபதிதான் கருத்துக் கூறமுடியும்

## ஜே.ஆர். இப்படிக் கூறுகிறார்

கொழும்பு, டிச 17

மாகாண சபைகளின் நிலை குறித்து புதிய ஜனாதிபதிதான் இனி கருத்துக் கூற முடியும்.

ஜனாதிபதி ஜெயவர்த்தன தன்னைச் சந்தித்த தொழில் நிபுணர் குழு ஒன்றிடம் முன் கண்டவாறு தெரிவித்தார்.

இக்குழு, மாகாண சபைகள் செயற்படுவதை இடைநிறுத்தி வைக்கவேண்டும் என்று ஜனாதிபதியை கேட்டுக் கொண்டது

அதற்குப் பதிலளிக்கையிலேயே திரு ஜெயவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் கோரிக்கை பற்றி ஜனாதிபதி சொன்னதாவது;

இக் கோரிக்கை இன்று ஏற்கப்பட்டால் ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னரும் இப்படியே செய்ய வேண்டிய நிலைமை ஏற்படும் இது நடைமுறைக்குச் சாத்தியமானதல்ல.

நாடாளுமன்றக் கலைப்பு விஷயத்தை ஒவ்வொரு வேட்பாளரும் தனக்குச் சாதகமாக்கப் பார்க்கிறார்கள்.

உடனே கலையுங்கள் என்கிறார் சிறிமாவோ, திரு. பிரேமதாஸாவோ ஜனாதிபதித் தேர்தல் முடிந்து 6 மாதங்கள் சென்ற பின்னரே நாடாளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்கிறார். இரண்டுக்கும் இணக்கம் காணவே டிசம்பர் 20 இல் கலைப்பு என்ற அறிவிப்பு.

கிழக்கு மாகாணத்தில் உள்ள சில பகுதிகளில் இருந்து இந்திய அமைதிப்படை விலகி விட்டது.

தற்போதைய சூழ்நிலையில் வடக்கு, கிழக்கு மாகாணத்தை பாதுகாக்கும் அளவுக்கு நம்மிடம் படையில்லை.

இறுதியில் அமைதிப் படை நாட்டைவிட்டே போகும் என்று உறுதி கூறுகிறேன்

இப்படி திரு. ஜெயவர்த்தன சொன்னார். (இ-எ)

# ஆசிரியர் நியமனத்துக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 17

1986 ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தில் இருந்து வெளியேறிய மாணவர்களுக்கு ஆசிரிய நியமனத்துக்கான இறுதித் தேர்வு நேர்முகப் பரீட்சை தற்போது நடைபெற்று வருகின்றது.

1986 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்களில் பட்டப் படிப்பை முடித்து வெளியேறியவர்களுக்கு ஆசிரிய நியமனத்துக்கான இரண்டு பரீட்சைகள் ஏற்கெனவே நடத்தப்பட்டிருந்தன.

முதலாவது பரீட்சை மார்ச் மாதம் கொழும்பிலும் இரண்டாவது பரீட்சை அக்டோபர் மாதம் வவுனியாவிலும் நடைபெற்றன

இந்தப் பரீட்சைகளில் தோற்றியவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் கடந்த 5 ஆம் திகதி தொடக்கம் உயர்கல்வி அமைச்சின் தலைமைக் காரியாலயமான இசுறுபாயவில் நடைபெற்று வருகின்றன

இதற்கான அழைப்புக் கடிதங்கள் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய பகுதிகள் தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு அனுப்பப்படவில்லை.

ஆனந்த போதிலும் கல்வி அமைச்சில் இருந்த பெயர்ப் பட்டியலின்படி நேர்முகப் பரீட்சை நடைபெற்று வருகின்றது.

இந்தப் பரீட்சையில் தோற்றியவர்களுக்கான ஆசிரியப் பயிற்சி நெறி 22 ஆம் திகதி முதல் மஹரகமவில் நடத்தப் படவுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது. (இ 5)

# ஒட்டுசுட்டானில் உள்ள படைமுகாம் விஸ்தரிப்பு

ஒட்டுசுட்டானிலுள்ள இந்திய அமைதிப்படை முகாம் விஸ்தரிக்கப்படுகிறது.

முகாம் விஸ்தரிப்புக்காக விற்பனைத் திணைக்களத்தை உடைக்கப்பட்டுள்ளது.

எட்டு வருடகாலத்துக்கு முன்னர் திரு. லலித் அத்துலத் முதலி கப்பல்துறை அமைச்சராக இருந்தபோது அவரால் இந்த விற்பனைத் திணைக்களம் திறந்து வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது

அதே சமயம் முள்ளியவளையிலுள்ள படை முகாம்களுக்கு சென்றிகள் அமைப்பதற்காக அப்பகுதியில் அநேக பனைமரங்கள், பலா மரங்கள் [illegible] வெட்டப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது. (இ 113)

## சபாரத்தினம் சுவாமிகளின் குருபூசை

திருவாசகம் சபாரத்தினம் சுவாமிகளின் 12 ஆவது குருபூசை 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 தொடக்கம் சுவாமிகள் சிவைக்யமடைந்த சுண்டிக்குளி விதானையார் வீதி சுண்டிக்குளியில் நடைபெறும்.

அன்று காலை 8.30 மணியளவில் மறவன் புலவு சுவாமிகளின் நினைவாலயத்தில் அபிஷேகம் பூசை நடைபெறும்.

ஆத்ம ஜோதி ஆசிரியர் திரு நா. முத்தையா, "கரவைகிழார்" திரு க. கந்தசாமி ஆகியோரின் விசேட உரைகள் இடம்பெறும். (ச)

# சமயா சமய தற்காலிக ஊழியர் நிரந்தரமாவர்

கொழும்பு டிச 17

1988 ஆகஸ்ட் 31 ஆம் திகதி வரை அரச சேவையில் 6 மாதத்துக்கு அதிக மாதச் சேவைக்காலமுடைய சமயா சமய தற்காலிக சேவையாளர்கள் அனைவரும் நிரந்தரமாக்கப்படுவர்.

இது உள்ளூராட்சித் துறையினருக்கும், கூட்டுத்தாபனத் துறையினருக்கும் பொருந்தும்

கடந்த அக்டோபர் 10 ஆம் திகதி அமைச்சரவை எடுத்துக் கொண்ட இந்த முடிவை ஜனாதிபதியின் செயலாளர், பிரதம அமைச்சரின் செயலாளர், நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் மற்றும் செயலாளர்களுக்கு அமைச்சரவையின் செயலாளர் அறிவித்துள்ளார்.

அமைச்சரவையின் முடிவிற்கேற்ப சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரசாங்க கூட்டுத்தாபனத் தலைவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அரசாங்க நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது. (இ- 21

## திருவாசக முற்றோதல்

யாழ்ப்பாணம், டிச 17

கொககுவில் மாத்தளை ஸ்ரீ கந்தசுவாமி கோயிலில் நாளை 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவாசகம் முற்றோதல் நடைபெறும்

காலை 8. 30 மணிக்கு ஆரம்பமாகும் இந்த திருவாசக முற்றோதல் மாலை 4 மணி வரை தொடர்ந்து இடம் பெறும்.

அடியார்கள் அனைவரும் கலந்து அருள்பெற்றுய்யும் வண்ணம் வேண்டப்படுகின்றனர். (இ)

ஆசிரியர்களுக்கு!

# விழா முற்பணமும் வங்கிக் கடனும்

பருத்தித்துறை டிச 17

வடமராட்சிக் கோட்டக் கல்விப் பணிமனையின் கீழ் இயங்கும் சகல பாடசாலைகளுக்கும் அடுத்த வருட முற்பகுதியில் விழா முற்பணமும் விசேஷ வங்கிக் கடனும் வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன

1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதச் சம்பளத்துடன் ஆசிரியர்களுக்கான விழா முற்பணம் ரூபா ஆயிரம் வழங்கப்படவுள்ளது.

அத்துடன் விழாச் செலவுகளுக்கென விசேஷ வங்கிக் கடனும் ஜனவரி மாதச் சம்பளத்துடன் வழங்கப்படும்.

பூவ் விசேஷ வங்கிக்கடனுக ரூபா 500/ வழங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அண்மையில் புதிய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் மூன்று மாத கால சேவையை பூர்த்தி செய்தால் மாத்திரம் விழா முற்பணமும் விசேஷ வங்கிக்கடனும் வழங்கப்படும் என வடமராட்சி கோட்டக் கல்விப்பணிமனை நிதி உதவியாளர் திரு. இ. கணபதிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

அத்துடன் இக் கடன்களுக்கான சகல விண்ணப்பபடிவங்களையும் ஜனவரி மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் கல்விப் பணிமனைக்கு அதிபர்கள் அனுப்பி வைக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-118)

## நிவாரணம் நாளை வழங்கப்படும

யாழ்ப்பாணம், டிச 17

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர்பிரிவை சேர்ந்த 2 272 குடும்பங்களுக்கு (இன்று) சனிக்கிழமை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கியில வழங்கப்படவிருந்த நிவாரணப் பணம் தவிர்க்க முடியாத காரணத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை வழங்கப்படும் என வங்கி முகாமையாளர் தெரிவித்திருக்கிறார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கொன்றை வேந்தன்"
"அன்னையும் பிதாவும்முன்னறி தெய்வம்"
- ஔவையார்.
20 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி ஔவையார் அருளிச் செய்த ஆங்கில -தமிழ் உரையுடன் கூடிய "கொன்றை வேந்தன்" என்ற சிறந்த நூலைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
**மில்க்வைற் -யாழ்ப்பாணம்**

# உதயன்

17 - 12 - 1988 சனிக்கிழமை

"சிக்கனம், சிக்கனம்"
25 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளில் உள்ள திருக்குறள்களை வெட்டி அனுப்பி ஒரு அப்பியாசக் கொப்பியைப் பரிசாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.
**மில்க்வைற்,- யாழ்ப்பாணம்**

## ஜனாதிபதி.....

(1 ம்பக்கத் தொடர்ச்சி)
லப்பட்டார்.

பித்திபஹல என்னும் இடத்தில் ரோந்து வந்த படையினர் மீது இனந் தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். படையினர் திருப்பிச்சுட்டதில் தீவிரவாத சந்தேக நபர் ஒருவர் மரணமானார்.

இதனிடையில் கடந்த 24 மணித்தியாலங்களில் தென்பகுதியில் 19 பேர் கொல்லப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

8 ஆளும் கட்சி ஆதரவாளர்களும் ஒரு அரசு ஊழியரும் கொல்லப்பட்டனர்.

எஞ்சிய பத்துப் பேர் ஜே. வி. பியினர் என்றும் அவர்களை "பிரா" இயக்கத்தினர் கொலை செய்ததாகவும் தெரிவிக்கப்பட்டது (இ-எ)

## நிவாரணம்......

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கலட்டி—245 குடும்பங்கள், காங்கேசன்துறை வடக்கு—370 குடும்பங்கள், காங்கேசன்துறை தெற்கு—284 குடும்பங்கள்:

பதினைந்தாம் திகதி அளவெட்டி வடக்கு கிழக்கு கிராம சேவகர் பிரிவில் இருந்து நிவாரணம் பெறுதவர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை தமக்குரிய நிவாரணப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரிந்து போகும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
குச் சென்றாலும் ஒரே மாதிரியே பேசிவருகிறேன்.

அன்று தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அழைப்பை ஏற்று கிட்டு அண்ணை அழைத்ததன் பேரில் காலஞ்சென்ற எமது தலைவர் விஜேயுடன் இங்கு வந்து பேசியதற்கும் இன்று இங்கே பேசுவதற்கும் எந்தவித வித்தியாசமும் இல்லை.

தமிழ் மக்களுடன் பின்னிப்பிணைந்தவன் போராளி இயக்கத் தலைவர்கள் அனைவரையும் நான் நன்கு அறிவேன். அவர்களுடன் ஒன்றாக இருந்து உணவருந்தி வாழ்ந்த அனுபவம் எனக்கு இருக்கிறது. இந்த அனுபவம் மற்றவர்களுக்குக் கிடையாது.

தமிழ் மக்களுடன் ஒன்றாகப் பின்னிப் பிணைந்திருந்த என்னையும் விஜேயையும் தெற்கில் தேசத் துரோகிகள் என்றனர்.

தமிழுக்குச் சம அந்தஸ்துக் கொடுப்பதை எதிர்த்து திருமதி பண்டாரநாயக்கா ஊர்வலம் சென்ற காலம் உண்டு.

யாழ்ப்பாணத்தில் யுத்தம் நடைபெற்றபோது எரிபொருள் அனுப்ப வேண்டாமென்றும் அங்கே அதிக இராணுவத்தினரை அனுப்புமாறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் நாடாளுமன்றத்தில் குரல் எழுப்பினர்.

தமிழ்ப் போராளி இயக்கத் தலைவர்களுடன் மூன்று மாதத்துக்கு முன்னர் பேச்சுவார்த்தை நடத்தினேன். அவர்கள் எல்லோரும் என்மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கின்றனர்.

அந்த நம்பிக்கையையும், நட்புறவையும் வைத்து உங்களுக்கு அமைதியையும் சமாதானத்தையும் பெற்றுக் கொடுப்பேன்.

தமிழர் விடுதலைக் கூட்டணி உட்பட தமிழ்ப் போராளிகள் குழுக்கள் எனக்கு ஆதரவு தந்திருப்பது குறித்து மகிழ்ச்சி அடைகின்றேன்.

பிரிந்து போகும் உரிமையுடனான சுயாட்சி கிடைக்குமிடத்துத் தமிழ் மக்கள் பிரிந்து போவார்களானால் இந்து சமுத்திரத்தில் மற்றொரு வியட்நாம் உருவாகும்.

இதற்கான சான்றுகள் இருக்கின்றன.

ஏகாதிபத்திய சக்திகள் இப்படி ஒரு நிலை உருவாக வேண்டும் என்று சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருப்பதற்கான சான்றுகள் உள்ளன. -

இவ்வாறு அவர் கூறினார். (அ-ஐ 5)

## மரணதண்டனை:
## ஜனாதிபதியே முடிவுசெய்வார்

இந்திராகாந்திகொலை வழக்கில்மரணதண்டனை விதிக்கப்பட்ட இரண்டாவது எதிரிகேஹர்சிங்குக்கு அவர்சமர்ப்பித்துள்ள கருணைமனு குறித்து ஜனாதிபதி புதியமுடிவு எடுக்கும்வரை மரணதண்டனை நிறைவேற்றப்படமாட்டாது.

இப்படி ஐந்து நீதியரசர்கள் அடங்கிய உயர் நீதிமன்றம் நேற்று தீர்ப்புக் கூறியது.

அந்தக் கருணைமனு அரசமைப்புச் சட்டத்தின் 72 ஆவது பிரிவின் கீழ் இன்னமும் ஜனாதிபதியின் பரிசீலனையில் இருப்பதாகவே கருதப்படும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பில் மேலும் தெரிவித்தது. (ஒ-எ)

## சூட்டுக்குப் பலி!

கடையை மூடிவிட்டுச் சென்ற வர்த்தகர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான சம்பவம் பலா பிரதான வீதியில் இடம் பெற்றது. (ஒ-ரி)

## பாதுகாப்பு...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
முடியும் என்று தேர்தல் ஆணையாளர் அறிவித்திருக்கிறார்.

வாக்குச் சாவடிக்கு வாக்காளர் அட்டை எடுத்துச் செல்லவேண்டும் என்பது கட்டாயம் அல்ல என்று அவர் தெரிவித்தார். (ஒ-எ)

# அரசாங்க அறிவித்தல்

## சனாதிபதித் தேர்தல் 1988- முல்லைத்தீவு தேர்தல் மாவட்டம்

1988 - 12 - 19 ஆம் திகதி நடைபெற இருக்கும் சனாதிபதித் தேர்தலின் பொழுது வாக்காளர்களின் வசதிகருதி கீழ்வரும் விபரங்களைத் தருகிறோம். இவற்றைக் கவனித்து அதன்படி உங்கள் வாக்கெடுப்பு நிலையங்களுக்குச் செல்லவும்.

1982 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தலின் பொழுது நீங்கள் வாக்களித்த நிலையத்தின் பெயர் முதல் பிரிவிலும் தற்போதைய சனாதிபதித் தேர்தலின் பொழுது நீங்கள் செல்ல வேண்டிய வாக்கெடுப்பு நிலையத்தின் பெயர் இரண்டாவது பிரிவிலும் தரப்பட்டுள்ளது. இதைக் கவனித்து உங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள புதிய வாக்கெடுப்பு நிலையத்திற்குச் சென்று வாக்களிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

போதிய கால அவகாசமின்மையால் உங்களுக்கு அனுப்பி வைக்க வேண்டிய உத்தியோகபூர்வமான வாக்காளர் அட்டைகளை அனுப்பி வைக்க முடியவில்லை என்பதை வருத்தத்துடன் அறியத் தருகிறோம். உங்கள் பெயர்கள் அடங்கிய 1987 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவேடு உங்கள் பிரிவுக்குரிய கிராம சேவை அலுவலர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. நீங்கள் உங்கள் கிராம சேவை அலுவலர் அலுவலகத்துக்குச் சென்று உங்கள் வாக்காளர் இலக்கத்தைக் குறித்துக்கொண்டு உங்கள் புதிய வாக்கெடுப்பு நிலையத்துக்குச் செல்லவும். இப்படிச் செய்தால் உங்கள் வாக்கெடுப்பு நிலையத்தில் தேவையற்ற காலதாமதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம்.

ஆர். கே. சந்திரானந்த த சில்வா,
தேர்தல் ஆணையாளர்.

| முன்பு வாக்களித்த நிலையம் | தற்பொழுது வாக்களிக்க வேண்டிய கொத்தணிப் பிரிவு |
|---|---|
| 1. வவுனிக்குளம், யூனிற் 2 அரசினர் தமிழ் கலவன் பாடசாலை<br>2. நட்டான்கண்டல், அரசினர் தமிழ் கலவன் பாடசாலை<br>3. பாண்டியன்குளம், அரசினர் தமிழ் கலவன் பாடசாலை<br>4. விநாயகபுரம், அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | இல: 01 வவுனிக்குளம் தமிழ் கலவன் பாடசாலை. |
| 5. துணுக்காய், அரசினர் தமிழ் கலவன் பாடசாலை<br>6. உயிலங்குளம், அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.<br>7. மல்லாவி, மல்லாவி மகா வித்தியாலயம்<br>8. யோகபுரம், யோகபுரம் மகா வித்தியாலயம் | இல: 02 மல்லாவி மகாவித்தியாலயம். |
| 9. அம்பலப் பெருமாள் குளம், அரசினர் தமிழ் கலவன் பாடசாலை<br>10. புத்துவெட்டுவான், அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | இல: 03 புத்துவெட்டுவான் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. |
| 11. மாங்குளம், மாங்குளம் மகா வித்தியாலயம்.<br>12. ஒலுமடு, அரசினர் தமிழ் கலவன் பாடசாலை;<br>13. கரிபட்டமுறிப்பு, அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | இல: 04 மாங்குளம் மகா வித்தியாலயம், |
| 14. முத்தையன் கட்டு வலது கரை, அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.<br>15. கற்சிலைமடு, அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.<br>16. முத்தையன் கட்டு இடது கரை, அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.<br>17. ஒட்டுசுட்டான், இந்துபோட் தமிழ் கலவன் பாடசாலை. | இல: 05 ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம். |
| 18. விசுவமடு, யூனிற் 2 அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.<br>19. சுதந்திரபுரம், அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.<br>20. உடையார்கட்டு குளம், அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | இல: 06 உடையார்கட்டு குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. |
| 21. இரணப்பாலை, றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை.<br>22. புதுக்குடியிருப்பு, புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம்.<br>23. புதுக்குடியிருப்பு, இலங்கை திருச்சபை தமிழ் கலவன் பாடசாலை<br>24. புதுக்குடியிருப்பு, றோ. க. தமிழ் கலவன் பாடசாலை | இல: 07 புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயம். |

| முன்பு வாக்களித்த நிலையம் | தற்பொழுது வாக்களிக்க வேண்டிய கொத்தணிப் பிரிவு |
|---|---|
| 25. முல்லைத்தீவு, றோ. க. தமிழ் கலவன் பாடசாலை<br>26. முல்லைத்தீவு, முல்லைத்தீவு மகா வித்தியாலயம்<br>27. முல்லைத்தீவு, முல்லைத்தீவு இந்து போட் தமிழ் கலவன் பாடசாலை<br>28. கள்ளப்பாடு, அரசினர் தமிழ் கலவன் பாடசாலை<br>29. சிலாவத்தை, றோ. க. தமிழ் கலவன் பாடசாலை | இல: 08 முல்லைத்தீவு மகா வித்தியாலயம். |
| 30. வெட்டுவாய்க்கால், அரசினர் தமிழ் கலவன் பாடசாலை<br>31. வெள்ளா முள்ளி வாய்க்கால், அரசினர் தமிழ் கலவன் பாடசாலை<br>32. வெள்ளா முள்ளி வாய்க்கால் மேற்கு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | இல: 09 வெள்ள முள்ளி வாய்க்கால் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. |
| 33 முள்ளியவளை, முள்ளியவளை 'இந்து போட்' தமிழ் கலவன் பாடசாலை<br>34. முள்ளியவளை, அரசினர் தமிழ் கலவன் பாடசாலை<br>35 வற்றாப்பளை, வற்றாப்பளை றோ. க. தமிழ் கலவன் பாடசாலை | இல: 10 முள்ளியவளை இந்து போட் தமிழ் கலவன் பாடசாலை. |
| 36. I தண்ணியூற்று, தண்ணியூற்று முஸ்லிம் மகா வித்தியாலயம் மண்டப இல 1 (ஆண் வாக்காளர்களுக்கு)<br>36. II தண்ணியூற்று, முஸ்லிம் மகா வித்தியாலயம் மண்டபம் இல. 2 (பெண் வாக்காளர்களுக்கு)<br>37. கணுக்கேணி, கிராம முன்னேற்றச் சங்க மண்டபம்<br>38. தண்ணியூற்று, தண்ணியூற்று இந்து போட் தமிழ் கலவன் பாடசாலை | இல: 11 தண்ணியூற்று முஸ்லிம் மகாவித்தியாலயம்; |
| 39. அம்பலவன் பொக்கணை, அம்பலவன் பொக்கணை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை<br>40. மாத்தளன், றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை | இல: 12 அம்பலவன் பொக்கணை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. |
| 41. குமுழமுனை, குமுழமுனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.<br>42. செம்மலை, செம்மலை மகா வித்தியாலயம்;<br>43. அலம்பில், அலம்பில் றோ. க. தமிழ் கலவன் பாடசாலை. | இல: 13 குமுழமுனை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. |
| 44. கொக்குத் தொடுவாய், கொக்குத் தொடுவாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை.<br>45. கொக்கிளாய், கொக்கிளாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. | இல: 14 கொக்குத் தொடுவாய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை. |
| 46 தண்டுவான், தண்டுவான் தமிழ் கலவன் பாடசாலை<br>47. ஒதியமலை, அரசினர் தமிழ் கலவன் பாடசாலை | இல: 15 தண்டுவான் தமிழ் கலவன் பாடசாலை. |

(C 513)

## சிங்கள...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டும்.

வடக்கு கிழக்கு மாகாணசபையில் தமிழ் மக்களின் முழுமையான பிரதிநிதித்துவம் இல்லை என்பது உண்மை.

வடக்கு கிழக்கு மாகாணசபையில் தமிழ் மக்கள் அனைவரையும் பிரதிநிதித்துவம் செய்யும் நிலையை ஏற்படுத்த முடியும்.

இதற்கு அந்நிய நாடும், அந்நிய இராணுவமும் வரும் வரையில் காத்திராமல் நாமே அந்த இலக்கை நோக்கி அணி வகுத்துச் செல்ல வேண்டும்.

தற்போது கிடைத்திருக்கும் அதிகாரங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

கிடைத்திருக்கும் இந்த அதிகாரங்களை திருமதி பண்டாரநாயக்காவும், திரு பிரேமதாசாவும் பறித்துக் கொள்ள விடமாட்டோம்.

இப்படி அவர் கூறினார்.

பேராசிரியர் ஓஸ்மன்ட் ஜயரத்ன, திரு. தயான் ஜயதிலக, அரசாங்க எழுதுவினைஞர் சங்கத் தலைவர் திரு. குணசேன மாநாம ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் பேசினர். (இ-ஐ-5)

## சிறிமாவோ,...,.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
நவம்பர் 30 முதல் டிசம்பர் 19 வரை அர்ச்சனை நடத்துமாறு கேட்டிருந்தார்.

டிசம்பர் 19 இல் வைகுந்த ஏகாதசி ஆதலால் அன்று தனிநபர் அர்ச்சனை நடத்த இயலாது என்று தேவஸ்தானம் கூறிவிடவே. வாக்குச் சீட்டுக்கள் எண்ணப்படும் டிசம்பர் 20 ஆம்திகதி கடைசி அர்ச்சனையை வைத்துக் கொள்ளும்படி அவர் கேட்டுள்ளார். (ஒ-எ-4)

# மரண அறிவித்தல்

## திரு. க. சின்னத்தம்பி

கோப்பாய் பிராம்பத்தையைச் சேர்ந்த கந்தையா சின்னத்தம்பி காலமானார். இவர் ஞானம்மாவின் அன்புக் கணவரும் அருளானந்தம் (லிகிதர் பரந்தன் M. P. C. S) விபுலானந்தம் (குஞ்சன்) காலம் சென்ற திருமதி தவமணிதேவி, குமாரலிங்கம் ஆகியோரின் அருமைத் தந்தையாரும், திருமதி தவமணி அருளானந்தம் (லிகிதர் பரந்தன் M.P.C.S) திரு. வி. குமாரலிங்கம் (சுன்னாகம் மின்சார நிலையம்) ஆகியோரின் மாமனாரும் தவத்தழகன், தர்ஷா, தனஞ்சயன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்;

ஈமக்கிரியைகள் இன்று 17-12-88 சனிக்கிழமை அன்னாரின் சகோதரர் க. ஆறுமுகம் ஆசிரியரது (மருதனார்மடம்) இல்லத்தில் நடைபெறும்.

"அம்பாள் அகம்"
மருதனார்மடம்,
இணுவில்.

தகவல்:
க. ஆறுமுகம்
(ஆசிரியர்)

(8313)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ... யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/3 இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 17 - 12 - 1988 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது. Printed and Published by New Uthayan Publication (Pvt) Ltd. 293/3 Navalar Road, Jaffna. on Saturday 17th December 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org